


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 02.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழல்நுட்பம்
- நியமனங்கள்










## இந்திய நிகழ்வுகள்

- மும்பையில் உள்ள சத்திரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையத்தின் பெயரை **சத்திரபதி சிவாஜி "மஹாராஜ்"** சர்வதேச விமான நிலையமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- குறிப்பு:
    - மும்பை விமான நிலையம் முதலில் சஹார் சர்வதேச விமான நிலையமாக அறியப்பட்டது. அதன்பின், **1999ம்** ஆண்டு சத்ரபதி சிவாஜி சர்வதேச விமான நிலையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

- **மத்தியப் பிரதேசத்தில்** நீர்பாசனம் மற்றும் அமைப்பின் திறன் ஆகியவற்றை விரிவுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக **$375 மில்லியன்** மதிப்புடைய கடன் ஒப்பந்தத்தில் **மத்திய அரசாங்கம் மற்றும் ஆசிய வளர்ச்சி** வங்கி ஆகியவை இணைந்து கையெழுத்திட்டுள்ளன.

- மத்திய மின்சாரத்துறை மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் அமைச்சகத்தின் இணை அமைச்சர் **R.K. சிங்** 'இந்திய மின் அமைப்பிற்கான வானிலைத் தகவல் **வாயில்**' என்ற ஆவணத்தை வெளியிட்டுள்ளார்.
    - மின்துறையின் அனைத்து பிரிவுகளிலும் வானிலை வாயிலின் மேம்பட்ட பயன்பாட்டை அளிப்பதற்காக IMD **(India Meteorological Department)** உடன் இணைந்து POSOCO (Power System Operation Corporation) இந்த ஆவணத்தை தயாரித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- நான்காவது சர்வதேச ஆயுர்வேதா மாநாடு ஆயுர்வேத அமைச்சர் **Shripad Yesso Naik (Minister of State For AYUSH)** தலைமையில் நெதர்லாந்தில் நடைபெற்றுள்ளது.

- இம்மாநாட்டில் **“ஆயுர்வேதம் உட்பட, “சுகாதாரத்தில் ஒத்துழைப்பு”** என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கு இந்திய தூதரகம் சார்பில் நடத்தப்பட்டது.

- வங்கக்கடலையொட்டி அமைந்துள்ள இந்தியா, வங்கதேசம், பூடான், மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் பல்வேறு தொழில்நுட்பம் பொருளாதார ஒத்துழைப்புக்காக **‘BIMSTEC’** என்ற அமைப்பை **1997-ல்** உருவாக்கி உள்ளன.
  - ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும் **BIMSTEC** மாநாடு, அதன் தலைமை பொறுப்பு வகிக்கும் நாடுகளில் நடைபெறும்.
  - 2018ம் ஆண்டின் தலைமை பொறுப்பு வகித்த **நேபாளத்தில்** சமீபத்தில் 4-வது BIMSTEC மாநாடு நடைபெற்றது.
  - **5வது BIMSTEC மாநாடு – 2019ல் இலங்கையில்** நடைபெறுவதை அடுத்து, தலைமை பொறுப்பு இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

- இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் இணைந்து, உலகம் முழுவதும் உள்ள மக்களை பாதுகாப்பதற்காக அடுத்த தலைமுறை **இன்புளுயின்சா** தடுப்பு மருந்தை தயாரிப்பதற்காக **ஹாரிசான் - 2020** என்ற ஆராய்ச்சி திட்டத்தை தொடங்கியுள்ளது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது துருவநிலை செயற்கைகோள் ஏவு வாகனம் **(PSLV – Polar Satellite Launch Vehicle)** மற்றும் சிறிய செயற்கைகோள் ஏவு வாகனம் **(SSLV – Small Satellite Launch Vehicle)** ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பணியை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கவுள்ளது.
  - திறன் கட்டமைப்பில் தனியார் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் **K. சிவன்** தெரிவித்துள்ளார்.

- மத்திய அரசாங்கமானது **அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்காக** பிரதம அமைச்சரின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவில் 21 உறுப்பினர்கள் உள்ளனர்.
    - இக்குழுவிற்கு **PM-STAC – [Prime Minister's Science, Technology and Innovation Advisory Council]** எனப் பெயரிடப்பட்டுள்ளது.
    - இதன் தலைவராக முதன்மை அறிவியல் ஆலோசகர் **K. விஜயராகவன்** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## நியமனங்கள்

- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, அக்டோபர் 02-ம் தேதி ஓய்வு பெறுவதை அடுத்து, அடுத்த உச்ச நீதிமன்ற நீதிபதியாக மூத்த **நீதிபதி ரஞ்சன் கோகாய்** என்பவரை நியமிக்குமாறு தீபக் மிஸ்ரா குடியரசுத் தலைவரிடம் பரிந்துரை செய்துள்ளார்.
- குறிப்பு
    - தீபக் மிஸ்ரா **45வது உச்சநீதிமன்ற** தலைமை நீதிபதியாக 28 ஆகஸ்ட் 2017ல் நியமிக்கப்பட்டுள்ளார்.

We Shine Academy™